பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 14 | சனிக்கிழமை | 28.06.2025 | அதிர்வு 328 |
|---|---|---|---|---|---|

மோட்டார் சைக்கிளில் இருந்து

## மயங்கி வீழ்ந்த பெண் மரணம்!

மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற தாயார் கீழே வீழ்ந்து மயங்கிய நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். 07



# செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் 2 எலும்புக்கூடுகள் அடையாளம்

### நீதிவானின் கண்காணிப்பில் தொடர்கின்றது அகழ்வுப் பணி





(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று வெள்ளிக்கிழமை மேலும் இரண்டு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 07

# வடக்கில் காணிகள் விடுவிப்பின்போது பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படக்கூடாது!



### இப்படி எச்சரிக்கின்றார் பொன்சேகா

"சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்தில் இருக்கும் நிலை இங்கில்லை. எனவே, வடக்கில் படை முகாம் அகற்றல் மற்றும் காணிகள் விடுவிப்பின்போது பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையிலேயே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அரச தொலைக்காட்சிக்கு 07




காணி நிர்ணய சட்டத்தின் மூலம் வடக்கில் சுமார் 6,000 ஏக்கர் நிலப்பரப்பை கபளீகரம் பண்ணுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசு எடுத்த நடவடிக்கையை சட்டரீதியான எதிர் நடவடிக்கை மூலம் 'பிரேக்' போட வைத்துத் தடுத்து இருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

அந்த முயற்சிக்கான பாராட்டுக்கள் சமூக ஊடகங்களில் வெளிவந்தாலும், அவற்றையும் தாண்டி, சில சுமந்திரன் எதிர்ப்பாளர்கள் – 'கற்றறிந்த அதிமேதாவிகள்'(?) – தங்கள் காழ்ப்புணர்வை வெளிப்படுத்த முகப்பு புத்தகங்கள் ஊடாக அடுக்கும் கொள்கைக் கோட்பாட்டு வியாக்கியானங்களைப் பார்க்கும்போது தமிழினம் உருப்பட இவர்கள் இடமளிக்கப் போவதில்லை என்ற எண்ணம்தான் வந்தது.

அந்த விடயத்துக்குள் இறங்க முன்னர், இத்தகைய முகநூல் வாய்ச்சவடால் பேர்வழிகளின் போக்கும் சிந்தனையும் கிறுக்குப் புத்தியும் எத்தகையது என்பதை உணர்த்துவதற்கு 06





# ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பான வழக்கை மீண்டும் தாக்கல் செய்யவுள்ளோம்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பான வழக்கை மீண்டும் தாக்கல் செய்யவுள்ளோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் புதல்வர் ஜோசப் பரராஜசிங்கம் டேவிட் 20 வருடங்களுக்குப் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு வருகை தந்த நிலையில் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் சிவம் பாக்கியநாதன், பிரதி மேயர் டினேஸ் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் இதன்போது கலந்துகொண்டனர்.

புதூர் பகுதியில் உள்ள மயானத்தில் உள்ள ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவுத்தூபியில் அவரின் மகன் மற்றும் நாடா ளுமன்ற உறுப்பினர் மற்றும் மேயர், பிரதி மேயர் ஆகியோர் சுடர் ஏற்றி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்,

"மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதி கோரி ஒவ்வொரு வருடமும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி போராட்டத்தை நடத்தி வருகின்றது.

ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையில் முக்கிய சந்தேகநபராகப் பிள்ளையான் நல்லாட்சிக்காலத்திலே கைதுசெய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

அந்த விடுதலை பல சர்ச்சைகளை உருவாக்கியிருந்தது. தென்னிலங்கையில் கூட நீதித்துறையில் பல்வேறு சந்தேகங்களை எழுப்பும் வகையில் அசாத் மௌலானாவின் வாக்குமூலம் இருந்தது. ஆனால், சட்டமா அதிபர் திணைக்களம் அந்த வலக்கைத் தள்ளுபடி செய்து குற்றவாளிக் கூண்டில் இருந்து பிள்ளையானை நீக்கியிருந்தார்கள்.

ஆனால், காலம் மாறியிருக்கின்றது. அந்தப் படுகொலையைச் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் ராஜபக்ஷ – ரணில் விக்கிரமசிங்க அரசு தற்போது ஆட்சியில் இல்லை. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மீண்டும் பிள்ளையான் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

பிள்ளையான் கைதானது ஈஸ்டர் குண்டுத் தாக்குதலா அல்லது திரிபொலியுடன் இணைந்து மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படும் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் உட்பட ஏனைய கொலைகளைப் பற்றியா என்பது நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனாலும், ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை வழக்கை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கின்றோம்.

இது தொடர்பான விடயங்கள் சில மாதங்களுக்கு முன்னர் ஜோசப் பரராஜசிங்கத்தினரின் குடும்பத்தினரின் இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் விசாரணைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றார். இங்கு மூடிமறைக்கப்பட்ட, நீதி மறுக்கப்பட்ட பல படுகொலைகளை விசாரணை செய்ய வேண்டும்.

இரு தினங்களுக்கு முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வந்தபோது அவர் எங்களிடம் சில விடயங்களைத் தெரிவித்திருந்தார் அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர்கள், படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பத்து விடயங்களை முன்வைக்குமாறு கூறியிருந்தார்.

இதன்போது நாங்கள் முதலாவதாக ஜோசப் பரராஜசிங்கத்தின் விசாரணையை மீள ஆரம்பிக்க வேண்டும், ரவிராஜ் படுகொலை, திருகோணமலை மாணவர்களின் படுகொலைகள், மாணவர்கள் கடத்தப்பட்டமை, இறுதிப் போர்க்காலப் பகுதியில் நேரடியாக கையளிக்கப்பட்டுக் காணாமல்போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் தொடர்பில் தெரிவித்திருந்தேன்.

இதேபோன்று அனந்தி சசிதரனின் கணவரின் வழக்கு போன்ற பல்வேறு விடயங்களைத் தெரிவித்திருந்தேன். நாங்கள் நீதிக்கான போராட்டத்தைக் கைவிடமாட்டோம்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரையில் நீதி கோரிய போராட்டத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுக்கும் என்பதை அவரின் மகனுக்கு நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம்." – என்றார்.





# பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆராய்வு

நாடாளுமன்ற மேம்பாட்டு செயற்றிட்டம் 2024/2027 இன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டடத்தின் இலங்கைக் கானவதிவிடப்பிரதிநிதிஅசூசாகொபோடா பெண் நாடாளுமன்ற ஒன்றியத்துடன் கலந்துரையாடினார்.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் எதிர்கால செயற்றிட்டங்கள் குறித்துக் கலந்துரையாடும் கூட்டமொன்று ஒன்றியத்தின் தலைவர் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா போல்ராஜ் அவர்களின் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பெண்களைத் தெரிவுசெய்வது மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் கட்சிகளின் செயலாளர்களைச் சந்திப்பது, பத்தாவது நாடாளுமன்றத்தில் சிறுவர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியத்தை மீண்டும் உருவாக்குவது, நாடாளுமன்றத்திற்குள் பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றை அமைப்பது உள்ளிட்ட விடயங்கள் குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது.











# சிக்குன்குன்யாவால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவது அவசியம்

சிக்குன்குன்யா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு ஏற்படக்கூடிய மூட்டு வலியிலிருந்து நிவாரணம் பெறுவதற்காக மருத்துவ சிகிச்சை பெறுவது அவசியமென சுகாதாரப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

சிலருக்கு மூட்டு வீக்கம் மற்றும் மூட்டு வலி சில வாரங்களுக்கு காணப்படலாமென தொற்றுநோய் ஆய்வுப்பிரிவின் பதில் விசேட வைத்திய நிபுணர் அருணி ஹதமுண தெரிவித்தார்.

நுளம்புகளால் பரவக்கூடிய வைரஸ் ஊடாக சிக்குன்குன்யா ஏற்படுகின்றது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அதிகளவில் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பதில் விசேட வைத்திய நிபுணர் அருணி ஹதமுண தெரிவித்துள்ளார்.




# இறக்குமதி செய்யப்பட்ட உப்பு தரமற்றதென வெளிக்கொணர்வு

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட உப்பு அடங்கிய 05 கொள்கலன்களை திருப்பியனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சுங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி உப்பு தொகையானது இலங்கையின் தர ஆய்வுகளில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உப்பு கொள்கலன்களும் தரநிலை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய குறித்த 05 கொள்கலன்களும் தரமற்றவை என வெளிக்கொணரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து சுமார் 2000 கொள்கலன்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த 10 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

# இலங்கையர்களுக்கான மறு நுழைவு விசாவின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்தது இஸ்ரேல்



இலங்கையர்களுக்கான மறு நுழைவு விசாவின் செல்லுபடியாகும் காலத்தை இஸ்ரேல் நீடித்துள்ளது.

விசாவின் செல்லுபடியாகும் காலத்தை ஜூலை 31 ஆம் திகதி வரை நீடிக்க இஸ்ரேலின் மக்கள் தொகை மற்றும் குடிவரவு ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



# ஹப்புத்தளையில் சுற்றுலா வலயம்

ஹப்புத்தளையில் புதிய சுற்றுலா வலயமொன்றை நிறுவுவதற்கான திட்டங்களை ஊவா மாகாண சபை அறிவித்துள்ளது.

உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட "சிலோன் டீ" வர்த்த நாமத்தின் மூலம் இலங்கையில் சர்வதேச ஆர்வத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹப்புத்தளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பங்கெட்டிய – கஹகல்ல பகுதியில் சுமார் நான்கு ஏக்கர் பயன்படுத்தப்படாத புல்வெளி காணப்படுகிறது.

அதன்படி, கஹகல்ல சுற்றுலா வலயத்தில் இலங்கை தேயிலை பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் தாவரவியல் பூங்காவை அமைப்பதற்கு ஊவா மாகாண சபை திட்டமிட்டுள்ளது.

# இலங்கைக்கான நிதியுதவியை அங்கீகரித்தது உலக வங்கி




இலங்கையின் இலவச கல்வி நவீனமயமாக்கல் திட்டத்துக்கு மேலதிகமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை உலக வங்கி அங்கீகரித்துள்ளது.

இந்த நிதியுதவி நாடு முழுவதும் சுமார் 500,000 மாணவர்கள் மற்றும் 150,000 ஆசிரியர்களுக்கு பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கிய கல்வி சீர்திருத்தங்களை மேம்படுத்தவும், கற்பித்தல் தரத்தை மேம்படுத்தவும், பாடசாலை வசதிகளை மேம்படுத்தவும், மாணவர் நல்வாழ்வை மேம்படுத்தவும் உதவும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

விசேடமாக வசதி குறைந்த கிராமப்புற மற்றும் பெருந்தோட்ட தோட்டப் பகுதிகளுக்கு உதவும் வகையில் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

ஆசிரியர் பயிற்சியை நவீனமயமாக்குதல் மற்றும் டிஜிட்டல் கற்றலை ஊக்குவித்தல், சுத்தமான நீர், மாதவிடாய் சுகாதாரம் மற்றும் மனநல ஆதரவு உள்ளிட்ட பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களை விரிவுபடுத்துதல் என்பவற்றை இலக்காக கொண்டும் இந்த திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இலங்கையின் கல்வி அமைச்சு மற்றும் மாகாண அதிகாரிகளால் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் 2018 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நான் சந்தித்த அல்லது எதிர்கொண்ட இதே போன்ற ஒரு வியாக்கியானத்தை முதலில் குறிப்பிடுவது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

இது நடந்தது 2009 மே மாதத்திற்குப் பிறகாக இருக்கலாம்.

யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த 2009 பெப்ரவரி மாதத்தில் பல நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில், கொழும்பில் ஒரு பிரபல மலர்ச்சாலையில் நடைபெற்ற என் உறவினரின் சாவு வீட்டில் வைத்து, பல நூற்றுக் கணக்கானோரின் முன்னிலையில், திடீரென மோசமான முறையில் என்னைத் தாக்கி, என் சேட்டையே கிழித்து அதன் மூலம் என் கண்களைக் கட்டி, கைகளை பின்புறமாக விலங்கிட்டு, அதைத் தடுக்க முயன்ற பலரையும் வன்முறையாலும், அயுதங்களை 'லோட்' செய்தும் அச்சுறுத்தியும் விட்டு, வெள்ளை வானில் கடத்திச் சென்றார்கள். பெரும் மோசமான மனச்சிதைவை எதிர்கொள்ளும் அவலங்களை அடுத்து நான் சந்திக்க நேரிட்டது.

நான் கடத்தப்பட்ட சமயத்தில், சில மணி நேரங்களின் பின்னர், ஆஸ்திரேலிய செய்தியாளர் ஒருவருக்கு பேட்டி அளித்த அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ என்னை ஒரு பயங்கரவாதி என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதல்களை நடத்துவதற்கு இணைப்பாளராக செயல்பட்ட பயங்கரவாதி நான் என்பதைத் தாம் பொறுப்போடு கூறிக் கொள்கிறார் என்று அறிவித்தார் கோட்டாபய ராஜபக்ஷ.

ஆனால் அவராலோ, அவரது பிரதான நான்கு தேசியப் புலனாய்வு தரப்புகளாலோ என்னை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துக் கொண்டு, பயங்கரவாதியாக நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எதனையும் எத்தகைய முறையில் என்னைக் குடைந் தெடுத்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான் விடுதலைப் புலிகளின் தலைமையில் இருந்து நாட்டின் ஜனாதிபதி வரை அனைவருடனும் – படைத் தளபதிகள் முதல் நாடுகளின் ராஜதந்திரிகள் வரை அனைவருடனும் – உரையாடினேன், ஊடாடினேன், நெருங்கிப் பழகினேன் என்பதைக் கண்டறிந்த கோட்டாவின் புலனாய்வாளர்களினால், அந்த ஊடாட்டம் ஓர் ஊடகவியலாளனின் சட்ட ரீதியான உரிமைகள், கடப்பாடுகள், பணிகள் என்ற எல்லையைத் தாண்டியவை என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் கண்டறியவே முடியவில்லை.

எனது கைதுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனு சட்டத்தரணி கௌரி சங்கரி தவராஜாவின் வழிநடத்தலில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் உயர்நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், எனக்கு எதிராகக் குற்றம் சுமத்துவதற்கு எதுவும் இல்லை என்பதை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் பதிந்து, ஒப்புக் கொண்டு, அதன் அடிப்படையில் பாதுகாப்புத் தரப்பினர் என்னை விடுதலை செய்ய வேண்டியவர்கள் ஆனார்கள். என் மீதான கடத்தல் கொடூரம் அத்தோடு முடிவுக்கு வந்தது.

நான் விடுதலையான அடுத்த தினங்களில் முகப்புத்தகம் ஒன்றின் பதிவு இப்படி இருந்தது:–

"இலங்கையில் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் எல்லோரும் காணாமல் போய் விட்டனர் அல்லது படுகொலை செய்யப்பட்டு விட்டனர். இவர் மாத்திரம் எப்படி மூன்று மாதத்தின் பின்னர் உயிருடன் வெளியேவந்தார்? இந்தத் தடுப்புக் காவல் காலத்தில் அவர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் செய்து கொண்ட மறைமுக ஒப்பந்தம் என்ன? அதை அவர் வெளிப்படுத்துவாரா?" – இப்படி கேட்டிருந்தார் அந்த முகப்புத்தக வாய்ச் சவடால் பிரகிருதி.

அவரைப் பொறுத்தவரை கடத்தப்பட்ட நான், அந்த மோசமான நிலைமையை எதிர்கொண்டமைக்காக கொல்லப்பட்டிருக்க வேண்டும். அல்லது உயிரிழந்திருக்க வேண்டும். உயிருடன் வந்தது நான் செய்த பாவம் என்பது போல அவரது கருத்து இருந்தது.

சரி, இனி விடயத்துக்கு வருகிறேன்.

காணிக் கபளீகர வர்த்தமானிக்கு எதிராக ஒருபுறம் மக்கள் போராட்டத்தை அறிவித்த சுமந்திரன், மறுபுறம் சட்டப் போராட்டத்தையும் முன்னெடுத்தார்.

மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்க அவர் விதித்த காலக்கெடுவுக்கு முதல் நாள் அந்த வர்த்தமானியை இடை நிறுத்துவது பற்றிய பகிரங்க அறிவிப்பை அரசு விடுத்தது. ஆனால் அது இரண்டு வார காலமாகியும் செயலுருப் பெறாத நிலையில், அவ்விடயத்தை ஒட்டி அரசின் போக்கில் சந்தேகம் கொண்ட சுமந்திரன் அதற்கு எதிராக சட்டப் போராட்டத்தை ஆரம்பித்து, அதன் மூலம் காணிகளைச் சூறையாடும் அரச திட்டத்திற்கு எதிரான தடை உத்தரவை உயர்நீதிமன்ற மூலம் பெற்றிருக்கிறார். அதற்காக அவருக்கு பாராட்டுக்கள் குவிவதைச் சகிக்க முடியாமல் வயிறு எரியும் முகநூல் பிரகிருதிகள் இப்படி ஒரு விமர்சனத்தை எழுதியிருந்தார்கள்.

"இந்த சட்ட மூலத்தையே (வர்த்தமானி அறிவித்தலையே) இல்லாது செய்வதற்கான மக்கள் போராட்டத்தை செய்யவேண்டியது கட்சியின் கடமை. ஆனால் இந்த ஜே.வி.பி அரசுக்கு எதிராக மக்களைத் திரளவிடாமல் தடுத்து, அதை சட்டப் போராட்டமாக மடை மாற்றி, தற்போது 'இடைக்கால உத்தரவு' கேட்டு வழக்குப் போட்டவர் சுமந்திரன். கட்சியை மக்களுக்காகப் போராட்டங்களை செய்யவிடாமல் தடுத்தவர் சுமந்திரன்." – என்று சுமந்திரனின் செயற்பாட்டுக்கு புதுவிதமான அர்த்தத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள், சுமந்திரன் இல்லாவிட்டால் மக்கள் போராட்டம் மூலம் இந்த காணி கபளீகர முயற்சியைத் தங்கள் ஆள்கள் வெற்றிகரமாகத் தடை செய்து விடுவார்கள் என்று படம் காட்டும் அந்தப் பிரகிருதிகள்.

அதை பார்த்த போது, கடத்திக் காணாமலாக்கப்பட்டு, பின்னர் உயிருடன் மீண்ட என் நிலைமையை ஒட்டி அப்போது விமர்சித்த பிரகிருதியின் போக்கில்தான், இப்போது சுமந்திரனின் இந்த சட்டப் போராட்டத்திற்கு எதிரான மேற்படி பிரகிருதியின் கருத்தும் அமைந்திருப்பதாக எனக்கு தோன்றியது. அதனைத்தான் வாசக நண்பர்களுடன் இங்கு பரிமாறிக் கொண்டேன். அவ்வளவே.

*   *   *

இன்றைய இந்தப் பதிவு எந்த முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கத்தையும், அதன் செயற்பாட்டையும் கொச்சைப்படுத்தும் நோக்கம் கொண்டது அல்ல. அந்தக் காலத்து நினைவுகளை மீள ஞாபக மூட்டும் ஓர் அம்சம் மட்டுமே.

நேற்று யாழ் மாநகர சபையின் முதல் அமர்வில் புளொட் சார்பில் சங்குக் கூட்டணியில் போட்டியிட்டு, வட்டாரத்தில் நேரடியாக வெற்றி பெற்ற தர்ஷானந் முன்வைத்த ஒரு பிரேரணை குறித்துக் குறிப்பிட்டிருந்தேன். சபை அமர்வு நாள்களில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு இலவச மதிய உணவு – சோறு கறிகளுடன் – பரிமாறப்பட வேண்டும் என்பது தான் அவரது கோரிக்கை.

அதை வாசித்து விட்டு என் பாடசாலைக் கால நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார்.

அந்த அழைப்பில் அவர் குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்ட முன்னர், எண்பதுகளின் நடுப்பகுதியில் ஆயுதப் போராட்டம் முகிழ்ந்து வீறு கொண்டு எழுந்த சமயத்தில் இருந்த சூழலைப் பற்றி குறிப்பிடுவது முக்கியமாகிறது.

ஆயுதப் போராட்டத்தின் அந்த ஆரம்ப காலகட்டத்தில் பல இயக்கங்கள் மும்முரமாகச் செயற்படத் தொடங்கின. அவற்றில் முன்னணியில், அதிக எண்ணிக்கையில் போராளிகளை வைத்திருந்த இயக்கம் புளொட் அமைப்புதான்.

அதனால் யுத்த முனைகளிலும், மக்களுக்கு மத்தியிலும் பணியாற்றும் தனது உறுப்பினர்களுக்கு தினசரி உணவு மற்றும் அத்தியாவசிய வசதிகளை செய்து கொடுப்பதற்குப் பெருந்தொகைப் பணத்தை – நிதியை – அந்த அமைப்பு திரட்ட வேண்டிய இக்கட்டில் இருந்தது. போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் அந்த இயக்கத்துக்கு அது தாங்க முடியாத பெரும் சுமையாக அமைந்தது. இது மக்கள் போராட்டம் என்பதால், மக்களுக்காகப் போராடும் போராளிகளுக்குரிய உணவை மக்களிடமிருந்தே பெறுவதுதான் முறைமை என்ற நோக்கத்தில் புளொட் அமைப்பு அந்தக் காலகட்டத்தில் ஒரு திட்டத்தை வகுத்தது.

கிராமங்களில், நகரங்களில் மக்களிடம் போராளிகளுக்கான உணவுப் பொதிகள் இத்தனை தாருங்கள் என்று குறிப்பிட்டு, சேகரித்து வழங்கும் ஒரு முறைமையை அவர்கள் அறிமுகப்படுத்தி இருந்தார்கள்.

புளொட் அமைப்பு போராளிகளுக்கு உணவு பொதிகளை மக்களிடம் இருந்து சேகரித்துப் பெறுவதால் அந்த அமைப்பை சில தரப்பினர் 'சோற்றுப் பார்சல் இயக்கம்' என்று சிலேடையாக – நையாண்டியாக – குறிப்பிடும் ஒரு முறை இருந்தது.

என் பாடசாலை கால நண்பரும் இன்னொரு இயக்கத்தில் இருந்தபடி இந்த விடயங்களை அவ்வப்போது விமரிசித்து வந்தவர்தான். அவர்தான் நேற்று என் பத்தியை வாசித்து விட்டு அழைப்பு எடுத்தார்.

"அவர்கள் சோற்றுப் பார்சல் சேகரித்துத் திரட்டிப் போராட்டம் நடத்தியவர்கள். அவர்கள் வழிவந்த உறுப்பினர் மாநகர சபையிலும் அந்தப் போராட்டத்தைத்தான் முன்னெடுக்கின்றார்" என்றார் அந்த நண்பர்.

ஆயினும், நேற்று மாநகர சபை அமர்வில் அதே தர்ஷானந் வேறு ஒரு போராட்டம் நடத்தினார்.

மாநகர சபையில் நேற்று உண்மையில் நடந்த கூட்டம் என்ன, அதன் நிகழ்ச்சி நிரல் யாது, அதனை எப்படி திசை திருப்ப முயன்றார்கள், அதன் பின்னணி யாது என்பவை பற்றிய விடயங்களை நாளை சற்று விவரமாகப் பார்ப்போமா நண்பர்களே...?

# அடுத்து ராஜித கைது?

கிரிந்த மீன்வளத் துறைமுகத்தில் சர்ச்சைக்குரிய மணல் அகழ்வுத் திட்டம் தொடர்பாக முன்னாள் மீன்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன சந்தேக நபராகப் பெயரிடப்பட வாய்ப்புள்ளதாக லஞ்ச ஒழிப்பு ஆணையம் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்கா முன்னிலையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது. இலங்கை மீன்வள துறைமுகக் கூட்டுத்தாபனம் தொடர்பான ஊழல் விவகார விசாரணையில் மேலும் கைதுகள் இடம்பெறுமா என்று நீதிவான் விசாரித்தார். அப்போதே முன்னாள் மீன்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன சந்தேக நபராகப் பெயரிடப்பட வாய்ப்புள்ளதாக நீதிமன்றுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட இலங்கை மீன்வள துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே, 5 மில்லியன் ரூபா மதிப்புள்ள மூன்று பிணைகளில் செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டார்.





# சில அரிசி வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படும்

எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் ஒருசில அரிசி வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படும் என விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எச்சரிக்கின்றன.

நாட்டில் அரிசி உற்பத்தி மற்றும் கீரி சம்பா இருப்பு குறித்து அரசாங்கத்திடம் சரியான தரவு இல்லை என்று விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கீரி சம்பாவிற்கு பதிலாக 40,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் இதனை கூறியுள்ளனர்.

## வடக்கில் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கிய நேர்காணலின்போது, வடக்கு, கிழக்கு காணி விடுவிப்பு சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:–

“வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகளின் மனோநிலையில் வாழும் சிலரும் இருக்கவே செய்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சி நிரல் குறித்து கனவு காணும் தரப்பினரும் உள்ளனர். அனைத்து மக்களும் அல்லர். ஒரு 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையானோர் அவ்வாறு இருக்கலாம்.

அதேபோல் விடுதலைப்புலிகளை ஆசிர்வதித்த அரசியல்வாதிகளும் உள்ளனர். விடுதலைப்புலிகளை மீள் எழுச்சி பெற வைப்பதற்கு முற்படும் டயஸ்போராக் குழுவும் உள்ளது.

இப்படியான அச்சுறுத்தல் இருப்பதால், போர் முண்ட பிறகு முகாம்கள் அமைப்பது பற்றி சிந்திக்காமல், தூர நோக்கு சிந்தனை அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படும். பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் முகாம்கள் இருக்க வேண்டும். அதற்காகப் போர்க் காலத்தில் இருந்ததுபோல் அல்ல. பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில் நகர்வுகள் இடம்பெறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பைப் பலவீனப்படுத்தினால் அது யாழ். மக்களுக்குத்தான் சரி இல்லை. அங்கு ஆவா என்ற பாதாளக் குழுவொன்று இருந்தது. கேரள கஞ்சாக்கள் வருகின்றன. வீதித் தடைகளை நீக்கினால் தெற்கிலுள்ள பாதாளக் குழுக்கள் வடக்குக்குச் சென்று ஒளியக்கூடும். எனவே, பாதுகாப்பு நெறிமுறைகள் அவசியம்.

சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்தில் இருக்கும் நிலை இங்கு இல்லை என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.” – என்றார்.

## செம்மணி மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இரண்டாம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்று மேலும் இரண்டு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை அகழ்ந்து எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 18 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மேலும் 4 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை முழுமையாக அகழ்ந்து எடுப்பதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றைவிட 4 மனித எச்சங்கள் (சிறிய எலும்புத் துண்டுகள்) அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மயங்கி வீழ்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த ஜீவராசா மேரி தெரேசா (வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 19ஆம் திகதி ஊர்காவற்றுறையில் உள்ள தனது வீட்டைப் பார்ப்பதற்கு மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். இதன்போது ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு முன்பாக இடது பக்கமாக ஒருவர் சைக்கிளில் வந்துள்ளார். இந்நிலையில் திடீரென பிரேக்கை அழுத்திய வேளை மோட்டார் சைக்கிளில் பின்னாலிருந்த மேற்படி பெண் திடீரென கீழே வீழ்ந்து மயங்கியுள்ளார்.

அவர் பின்னர் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



# என் குடும்பத்தைக் கூண்டோடு சிறையில் தள்ள அரசு முயற்சி!

## இப்படிக் கதறுகின்றார் கெஹலிய

என்னையும் என் குடும்பத்தையும் சிறையில் அடைக்க இந்த அரசு முயற்சிக்கின்றது என்று முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றஞ்சாட்டினார்.

கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணையம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் ஒரு மருமகன் மீது இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணையம் 43 குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளது.

இது தொடர்பில் கெஹலிய ரம்புக்வெல கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசு என் மீதும், என் குடும்பம் மீது ஆதாரம் இல்லாத போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றது.

என்னையும் என் குடும்பத்தையும் சிறையில் அடைத்து வாழ்நாள் முழுவதும் துன்புறுத்த இந்த அரசு முயற்சிக்கின்றது.

சிறை வாழ்க்கைக்கு நாம் அஞ்சவில்லை. உண்மை ஒரு நாள் வெளிவரும். நீதி தேவதை எம்மைக் காப்பாற்றுவாள்." – என்றார்.

# இலங்கை போக்குவரத்து சபை பஸ்களின் சாரதிகள் ஆசனப்பட்டிகள் அணிவது கட்டாயமாக்கப்பட்டது



இலங்கை போக்குவரத்து சபை உட்பட அனைத்து பயணிகள் பஸ்களின் சாரதிகளும், எதிர்வரும் ஜூலை 1 ஆம் திகதி முதல் ஆசனப்பட்டிகள் அணிவதை கட்டாயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதனை இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பி.ஏ. சந்திரபால நேற்று தெரிவித்துள்ளார்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

வீதி பாதுகாப்பில் சர்வதேச தரத்தைப் பேணுவதற்கான முயற்சியில் இது முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உரிய சமயத்தில் தடை!

வடமராட்சிக் கிழக்கு, பச்சிலைப் பள்ளி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள 5,941 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் தீய எண்ணத்தில் - கபளீகரம் பண்ணும் திட்டத்துடன் - சூறையாடும் இலக்கோடு - தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்த கபட நகர்வு தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் நேற்று இடைக்கால தடையுத்தரவு ஒன்றைப் பெற்றுக் கொண்டதன் மூலம் பெரிய தடைக் கல்லை தமிழரசுக் கட்சி சரியான சமயத்தில் நாட்டியிருக்கின்றது என்று குறிப்பிடுவது மிகையல்ல.

காணி நிர்ணயச் சட்டம் பிரிவு 4 இற்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் உரிய சான்றாதாரங்களுடன் உரிமை நிரூபிக்கப்படாத 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிகளை அரச காணிகளாக்கிக் கையகப்படுத்தி, சுவீகரிப்பதற்கு வழி செய்யும் விதத்தில் 28.03.2025 திகதியிடப்பட்டு வெளியான 2430/25 இலக்கமிடப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தும் நடவடிக்கையே சட்டரீதியாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

அந்த வர்த்தமானி அறிவித்தல்படி காணிகளை நிரூபிப்பதற்கு வழங்கப்பட்ட காலக்கெடு முடிந்து, அவற்றை அரசு சுவீகரிப்பதற்கான அதிகாரம் அந்த வர்த்தமானியின் கீழ் அரசுக்கு வருவதற்கு சுமார் பன்னிரண்டு மணி நேரமே இருக்கையில் - கடைசிக் கட்டத்தில் - இந்த உத்தரவை சட்டப் போராட்டம் மூலம் உயர்நீதிமன்றத்திடம் பெற முடிந்திருகின்றமை ஒரு சாதனைதான்.

மேற்படி வர்த்தமானியின் கீழ் காணி சுவீகரிப்பு அதிகாரம் இலங்கை அரசுக்கு நேற்று நள்ளிரவுக்கு பின் வரவிருக்கையில் இந்த மனு நேற்று காலை உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இந்த உத்தரவு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த வர்த்தமானி வெளியானமை பற்றிய விவரங்களை, அது வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் திகதிக்கு சுமார் ஒரு மாதம் கழித்து, 'முரசு' நாளிதழ் முழு விவரங்களோடு அம்பலப்படுத்தியமையை அடுத்து அதற்கு எதிராகத் தமிழர்களின் உணர்வெழுச்சி பீறிட்டது.

அந்த எதிர்ப்பை அடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தமானியை விலக்கிக் கொள்வதாக அரசு அறிவித்த போதிலும், கடைசி நேரம் வரை அதைச்செய்யாமல், அரசு இழுத்தடித்து வந்ததை அவதானித்து, இந்த விவகாரத்தை அடிப்படை உரிமை மீறல் மனு மூலம் உயர் நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

அரசாங்கம் இந்த சர்ச்சைக்குரிய வர்த்தமானியை வாபஸ் பெறுவதாக பகிரங்க செய்தி அறிவிப்பு விடுத்தது. ஆனால் அதைச் செய்யவில்லை. நேற்று நள்ளிரவுக்கு முன்னர் அதனை வாபஸ் பெறுவது தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல் வரும் என்று அரசு சார்பில் சட்ட மா அதிபரின் பிரதிநிதி நேற்று உயர் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட போதிலும், அதனை தம்மால் உறுதிப்படுத்த முடியாது என்பதையும் அவர் கோடி காட்டத் தவறவில்லை.

ஆக, கடைசி நேரம் வரை இந்த வர்த்தமானி அறிவித்தலை விலக்கிக் கொள்வதாகக் காட்டி, நம்பிக்கை கொடுத்து, காலத்தை இழுத்தடித்து, காலம் முடிந்தும் மூல வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தனக்கு சம்பந்தப்பட்ட காணிகளை சுவீகரிக்கும் அதிகாரத்தை எதிர்ப்புகளைச் சமாளித்து, சட்டரீதியாக பெற்றுக் கொள்வதே ஆட்சித் தரப்பின் சதித்திட்டம் என்பது அதன் நடவடிக்கைகள் மூலம் அம்பலமாகிவிட்டது. அந்தப் பின்புலத்திலேயே இவ்விடயங்களை விளங்கிக் கொண்ட உயர் நீதிமன்றம் வேறு வழியின்றி இந்த இடைக்கால தடை உத்தரவை கடைசி நேரத்திக் விதித்திருக்கின்றது.

அரசு இவ்விடயத்தில் என்ன செய்யப் போகின்றது, என்ன செய்யத் திட்டமிட்டு இருந்தது என்பவை இனித்தான் அம்பலமாகும்.

# இந்தியா - அமெரிக்கா இடையே மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தம்

## டொனால்ட் ட்ரம்ப் தகவல்



இந்தியா – அமெரிக்கா இடையே மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், டொனால்ட் ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பு, அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதன் அறிகுறி என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை மாளிகையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய டொனால்ட் ட்ரம்ப்,

“நாங்கள் சில சிறந்த ஒப்பந்தங்களை மேற்கொள்ள இருக்கிறோம். இந்தியாவுடன் ஒரு மிகப் பெரிய ஒப்பந்தம் ஏற்பட உள்ளது.

சீனா உடனான ஒப்பந்தத்தையும் நாங்கள் தொடங்கி இருக்கிறோம். உண்மையில் ஒருபோதும் நடக்க முடியாத விஷயங்கள் நடக்கின்றன. ஒவ்வொரு நாட்டுடனும் உறவு மிகவும் நன்றாக உள்ளது.

நேற்றுதான் சீனாவுடன் கையெழுத்திட்டோம். எங்களிடம் அனைவரும் உள்ளனர். நாங்கள் எல்லோருடனும் ஒப்பந்தங்கள் செய்யப் போவதில்லை. சிலருக்கு நன்றி தெரிவித்து கடிதம் மட்டும் அனுப்ப உள்ளோம். அவர்கள் 25 வீதம், 35 வீதம், 45 வீதம் வரி செலுத்தப் போகிறார்கள். எங்களுக்கு எளிதான வழி அதுதான். எங்கள் அதிகாரிகள் அப்படிச் செய்ய விரும்பவில்லை. அவர்கள் சில நாடுகளுக்கு மட்டும் அவ்வாறு செய்ய விரும்புகிறார்கள். அதிகமான ஒப்பந்தங்களைச் செய்யவே அவர்கள் விரும்புகிறார்கள்.” என தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இந்திய பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் ராஜேஷ் அகர்வால் தலைமையிலான இந்திய குழு, வியாழக்கிழமை அமெரிக்காவுக்கு சென்றுள்ள நிலையில், ட்ரம்பின் கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

வர்த்தகத் துறையின் சிறப்புச் செயலாளராக உள்ள ராஜேஷ் அகர்வால் தலைமையிலான குழு தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. ஜுலை 9 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தத்தை இறுதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மத்திய ஆபிரிக்க குடியரசில் பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 29 மாணவர்கள் பலி!





மத்திய ஆபிரிக்க குடியரசின் தலைநகரில் பாங்குயில் பாடசாலைக் கட்டடமொன்று தீப்பிடித்து எரிந்ததில் 29 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் கூட்ட நெரிசலில் சிக்கி 280 பேர் காயம் அடைந்துள்ளனர்.

மத்திய ஆபிரிக்க குடியரசின் தலைநகரில் பாங்குயில் உயர்நிலைப் பாடசாலையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் இந்த ஆண்டுக்கான இறுதித் பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இதனிடையே நேற்று முன்தினம் மாணவர்கள் பாடசாலையில் அமர்ந்து தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு குண்டு வெடிப்பது போல பயங்கர சத்தம் கேட்டதனால் பீதியடைந்த மாணவர்கள் அங்கும் இங்குமாக ஓடினர்.

இதனை தொடர்ந்து பாடசாலை கட்டடம் தீப்பிடித்து எரிந்ததுள்ளது. இதற்கிடையே தீ விபத்து குறித்து மீட்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில், அங்கு விரைந்து வந்த



தீயணைப்பு வீரர்கள் பல மணி நேர போராட்டத்துக்கு பின் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த கோர சம்பவத்தில் 29 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும் கூட்ட நெரிசலில் சிக்கி 280 பர் காயம் அடைந்துள்ளனர். அவர்களை மீட்பு படையினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்த நிலையில் அவர்களுக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

# எஸ் 400 வான் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சருடன் ராஜ்நாத் சிங் பேச்சு



எஸ் 400 வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்குவது, சுகோய் 30 ரக போர் விமானங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவது உள்ளிட்டவை தொடர்பாக ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆண்ட்ரி பெலோசோவுடன் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை மேற்கொண்டார்.

சீனாவின் கிங்டாவோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டுக்கு இடையே பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஆண்ட்ரி பெலோசோவை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பு தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

"இந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகள், தற்போதைய புவிசார் அரசியல் சூழல்கள், எல்லை தாண்டிய தீவிரவாதம், இந்திய - ரஷ்ய பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இந்தியாவுடன் வலுவான நட்புறவை ரஷ்யா கொண்டுள்ளதாகத் தெரிவித்த ஆண்ட்ரி பெலோசோ, கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி பஹல்காமில் நடந்த தாக்குதல் கோழைத்தனமானது என்று குறிப்பிட்டார்.

ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்தும் அதன் காரணமாக பாதுகாப்புத் தளவாட உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இருதலைவர்களும் விரிவாக விவாதித்தனர். எஸ் 400 வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்குதல், சுகோய் 30 ரக போர் விமானங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துதல், பாதுகாப்புப் படைகளுக்குத் தேவையான ஆயுதத் தளவாடங்களை குறித்த காலத்திற்குள் கொள்முதல் செய்தல் போன்ற அம்சங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான், இஸ்ரேலில் இருந்து இதுவரை 4,400 இந்தியர்கள் மீட்கப்பட்டனர்



ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளில் இருந்து ஒபரேஷன் சிந்து நடவடிக்கையின் கீழ், 19 சிறப்பு விமானங்கள் மூலம் இதுவரை 4,400 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் மீட்டு அழைத்து வரப்பட்டுள்ளனர் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே போர் நடைபெற்றதை அடுத்து, அந்த இரு நாடுகளிலும் வசித்து வந்த இந்தியர்களை மீட்டு அழைத்து வருவதற்காக மத்திய அரசு கடந்த 18 ஆம் திகதி ஒபரேஷன் சிந்து என்ற பெயரில் நடவடிக்கையை தொடங்கியது. இதுவரை 19 சிறப்பு விமானங்களில், 4,400 இற்கும் மேற்பட்ட இந்தியர்களை இந்தியா மீட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரானில் இருந்து வெளியேறி, ஆர்மீனிய தலைநகர் யெரெவனுக்கு வந்து சேர்ந்த 173 இந்தியர்கள் கொண்ட புதிய குழு, பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் இரவு டில்லி வந்தடைந்ததாக வெளியுறவு அமைச்சகம் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளது.

முன்னதாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால்,

"ஒபரேஷன் சிந்துவின் ஒரு பகுதியாக, 3 இந்திய போர் விமானங்கள் உட்பட 19 சிறப்பு விமானங்கள் மூலம் மொத்தம் 4415 இந்திய நாட்டினர் (ஈரானில் இருந்து 3597 பேர் மற்றும் இஸ்ரேலில் இருந்து 818 பேர்) இதுவரை வெளியேற்றப்பட்டுள்ளனர். 9 நேபாள நாட்டினர், 4 இலங்கை நாட்டினர் மற்றும் ஒரு இந்திய நாட்டவரின் ஈரானிய மனைவி ஆகியோர் ஈரானில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஈரானில் இருந்து இந்தியர்களை அழைத்து வர மொத்தம் 14 விமானங்களை நாங்கள் அனுப்பி வைத்தோம். இந்த விமானங்கள் மஷாத், ஆர்மீனியாவின் யெரவான் மற்றும் துர்க்மெனிஸ்தானில் உள்ள அஷ்காபாத் ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டன. எகிப்து மற்றும் ஜோர்டான் அரசாங்கத்தின் ஆதரவுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். இஸ்ரேல், ஜோர்டான் மற்றும் எகிப்தில் உள்ள இந்திய தூதரகங்கள் டில்லியில் உள்ள வெளியுறவு அமைச்சக தலைமையகத்துடன் மிகவும் நெருக்கமாக ஒத்துழைத்தன.

ஈரான் அரசாங்கத்திற்கும் நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். ஏனெனில், நமது நாட்டினரை வெளியேற்றுவதற்காக அவர்கள் தங்கள் வான்வெளியைத் திறந்தனர். இந்த சிறப்புச் செயலுக்கு ஈரான் அரசாங்கத்திற்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். எங்கள் மக்களை வெளியேற்ற எங்களுக்கு உதவியதற்காக துர்க்மெனிஸ்தான் மற்றும் ஆர்மீனியா அரசாங்கங்களுக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம். ஈரான், இஸ்ரேலில் நிலவும் கள நிலைமையை மத்திய அரசு மதிப்பிட்டு வருகிறது. அதன் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கை குறித்து முடிவு எடுக்கப்படும்." என்று தெரிவித்துள்ளார்.

# ‘அணையா விளக்கு’ போராட்டத்தின் செல்வழியை மடைமாற்றிய அறத்துக்கு மாறான துர்நிகழ்வுகள்!

## ஏற்பாட்டாளர்களின் நிறைவு அறிக்கையில் விவரிப்பு

செம்மணி மனிதப் புதைகுழி விடயத்திலும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும் தொடர்கின்ற இருள் நீங்க நடத்தப்பட்ட “அணையா விளக்கு“ போராட்டத்தை ஏற்பாடு செய்த மக்கள் செயல் அமைப்பினர் தமது போராட்டம் முடிவுற்ற நிலையில் அது குறித்து ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதன் விவரம் வருமாறு:-

செம்மணி மனிதப் புதைக்குழிக்கு சர்வதேச நீதி வேண்டியும், தமிழ் சமூகத்திடையே விழிப்பை ஏற்படுத்தவுமாக “மக்கள் செயல்“ தன்னார்வ அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, கடந்த 23,24,25 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட “அணையா விளக்கு“ போராட்டம் எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிக தாக்கம் செலுத்துகையை ஏற்படுத்தியிருக்கிறது.

இப்போராட்டத்தினை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு எம்மோடு துணை நின்ற, வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், மும்மதங்களின் தலைவர்கள், யாழ்ப்பாண மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் சிவில் சமூக அமையத்தினர், தமிழ் அரசியல் கட்சிகள், ஊடகவியலாளர்கள், ஊடக அமைப்புகள், வலையொளியாளர்கள், புலம்பெயர் தமிழ் அமைப்புகள், அரச சார்பற்ற தன்னார்வ அமைப்புகள், குடிதண்ணீர், உணவு, சிற்றுண்டிகளை வழங்கிய அனுசரணையாளர்கள், அரசியல் - சமூக செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், வலிகாமம் கிழக்கு மற்றும், நல்லூர் பிரதேச சபையினர், யாழ்ப்பாண மாநகர சபையினர், போராட்டத்திற்குத் தேவைப்பட்ட பொருளுதவிகள் புரிந்த கொடையாளர்கள், எரிபொருள் நன்கொடையாளர்கள், கொட்டகை மற்றும் ஒளி, ஒலி வசதிகளைச் செய்துதவியவர்கள், சமூக வலைத்தளங்களில் போராட்டம் குறித்த பதிவுகளைப் பகிர்ந்து பரவலடையச் செய்தவர்கள், இறுதிநேரத்தில் மனிதச் சங்கிலியாக நின்ற நண்பர்கள், நலன் விரும்பிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மக்கள் செயலின் சார்பில் சிரம்தாழ்த்திய நன்றிகள். நீங்கள் புரிந்தவை, “காலத்தினால் செய்த, ஞாலத்திலும் மானப் பெரிய உதவி“.

இந்தப் போராட்டத்திற்கு நிதிசார்ந்த உதவிகளைப் பலரும் புரிந்துள்ளனர். அத்தகைய நிதிசார்ந்த உதவிகளில் நேரடியாக மக்கள் செயல் எவ்விடத்திலும் தொடர்புறவில்லை என்பதையும், பொருள் சார்ந்த உதவிகளை மாத்திரமே மக்கள் செயல் ஏற்றுக்கொண்டது என்பதையும் இவ்விடத்தில் பதிவுசெய்கின்றோம்.

தமிழர் தாயகத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் விடயத்திலும் சர்வதேசத்தின் கவனத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்கும் முகமாக நிகழ்த்தப்பட்ட இப்போராட்டத்தின் இறுதி நாளில் முகம்சுழிக்கவைக்கும் சில துர்நிகழ்வுகள் இடம்பெற்றுவிட்டன. தங்களுக்குள் ஜனநாயகத் தன்மையைப் பேணமுடியாத அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் - அமைப்புக்களைச் சார்ந்தவர்கள்



- தாம் சார்ந்த அரசியல் பின்புலங்களின் இருப்பை முதன்மைப்படுத்தும் நோக்கில் அடிப்படை மனித அறத்திற்கு மாறாக நடந்துகொண்ட முறையானது போராட்டத்தின் செல்வழியை மடைமாற்றி, அதன் வல்லமையை குன்றச்செய்யும் மறைமுக நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருந்தமை இப் போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியது. களத்திற்கு வெளியிலிருந்த பார்வையாளர்களுக்கு, ஏற்பாட்டாளர்கள் தொடர்பில் கேள்விகளையும் ஏற்படுத்தியது. இத்தகைய பின்னணியில் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் எனும் வகையில் எதிர்பாராததும், திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டதுமான இந்த அநாகரிக செயற்பாடுகளினால் அசௌகரியங்களிற்கும், கௌரவக்குறைவிற்கும் உள்ளான வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுவினர்களிடமும், பொதுமக்களிடமும், அரசியற் பிரமுகர்களிடமும் எமது உளப்பூர்வமான வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில், அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் கடந்து வந்த நீண்ட நெடிய, அலைச்சலும் கண்ணீரும் நிறைந்த, கொடிய பயணத்தின் வலிகளது கனதியையும், அவர்களின் போராட்ட நியாயப்பாடுகளையும் அறியாத, ஊடக அறமற்ற சில வலையொளியாளர்கள், தமது காணொளிகளிற்கான பார்வை எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில், பரபரப்பு அல்லது ஒரு குழப்ப நிலையை வலிந்து ஏற்படுத்துவதற்குஏதுவானபுறச்சூழலைஉருவாக்குவதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபட்டமை அருவருக்கத்தக்க விடயமாக அமைந்தது. எதிர்வரும் காலங்களில் போராட்டங்களைத் திட்டமிடும் தரப்புக்கள் இத்தகைய போலி ஊடகர்களைக் கையாள்வதற்கான விசேட பொறிமுறைகளில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றது.

இத்தகைய நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும், போராட்ட நிகழ்விடத்திலிருந்து பகிரப்பட்ட காணொளிகள் மற்றும் நேரடிக் காணொளிகள் போராட்டச் சூழலின் உண்மை நிலைவரத்தினை மக்களுக்கு விளக்கியது. இந்நிலையில், எத்தகைய கட்சிசார் - அமைப்புக்கள்சார் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கும் உட்படாது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் விடயத்தில் நீதி கோருவது மட்டுமே இப்போராட்டத்தின் உள்ளார்ந்த நோக்கம் என்பதும், இக் கோரிக்கையின் பின்னுள்ள அறமும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் இக்கால கட்டத்தில் இப்போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவமும், புரிந்துகொள்ளப்பட்டது. இதன்விளைவாக நிகழ்விடத்தில் மக்கள் குழுமத் தொடங்கியமையுடன் இப்போராட்டம் இன்னொரு பரிமாணத்தினை அடைந்தது. “அணையா விளக்கு” அனைவரது மனங்களிலும் பற்றிக் கொண்டது. மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் அணையா விளக்கின் ஒளிக்கீற்றுக்கள் பிரகாசித்தமையை அறிந்திருப்பீர்கள். காலத் தேவை கருதி சட்டென இதனை ஏற்பாடு செய்த அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தருகிறோம். இப்படியாக அணையா விளக்கென்பது வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும், செம்மணி மனிதப் புதைகுழி விடயத்திலும் சூழ்ந்திருக்கின்ற இருளை நீக்கவேண்டிய அவசியத்தை உலகறியச் செய்திருக்கின்றது.

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்தினைப் பார்வையிட்டுத் திரும்புவதனையே அதுவரை தனது நிகழ்ச்சி நிரலாகக் கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் நிகழ்ச்சி நிரலை மாற்றி, போராட்டம் இடம்பெற்ற களத்திற்கு அவரை வர வைத்தது, இப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த ஏற்பாட்டாளர்களின் தீவிர முயற்சி என்பதற்கும் அப்பால் இப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் நீண்ட காத்திருப்பும், இவ் மனிதப்புதைகுழிகளில் புதையுண்டு போன மக்களின் ஆத்ம பலமுமேயாகும். அந்த ஆத்மாக்கள் புதையுண்டும் பேசிக் கொண்டிருக்கின்றன. நிலம் பிளந்து நீதி கோருகின்றன.

போராட்ட நிகழ்விடத்திற்கு வருகை தந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர், அங்கு ஏற்றப்பட்டு மூன்று நாள்களாக எரிந்து கொண்டிருந்த அணையா விளக்கினை மும்முறை வணங்கி, புதைக்கப்பட்டோரை நினைவு கூர்ந்து மலர்தூவி அஞ்சலி செலுத்தியமை போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் வலியை, அவர்களின் கோரிக்கைகளை ஒத்துணர்வுடன் அணுகியமையையே காட்டுகின்றது. தன்னெழுச்சியான மக்கள் போராட்டத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே இதனைக் கொள்ள முடி-கின்றது. அவர் போராட்டக்காரர்களின்

தொடர்ச்சி▼

# ‘அணையா விளக்கு’ போராட்டத்தின் செல்வழியை மடைமாற்றிய அறத்துக்கு மாறான துர்நிகழ்வுகள்!

தொடர்ச்சி▲

ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய செப்புப் பட்டயத்தினைப் பெற்றுக் கொண்டமையுடன் அல்லது அவர் வணக்கம் செலுத்தியமையுடன் இம் மக்களிற்கான நீதி கிடைத்துவிட்டது என்பது பொருளல்ல. மாறாக, சர்வதேச நாடுகளை உள்ளடக்கிய அமைப்பொன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் அவ்வமைப்பில் முக்கிய பதவியில் இருக்கும் தனிநபர் ஒருவரின் மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டியுளோம் என்பதும், நீண்ட பயணத்திற்கான முதலடியை மக்கள் தன்னெழுச்சியாக எடுத்துவைத்துள்ளனர் என்பதுமே இப்போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

உலகின் மொத்த மனச்சாட்சியையும் தட்டிப்பார்த்தோம். அரசுடைய தரப்புக்களது நலன்சார்ந்த அரசியலுறவுகளுக்கு முன்னால் எமது நியாயமான நீதிக் கோரிக்கைகள் அடிபட்டுப்போகின்றன என்பதே அனுபவமாகக் கிடக்கிறது. எனவே எமக்கான நீதியை உலக மாந்தர்கள் ஒவ்வொருவரின் மனச்சாட்சியையும் தொட்டுத் தட்டிக் கேட்கிறோம். பல தலைமுறைகள் கடந்தாவது நாம் கோரும் நீதியின் கதவுகள் திறக்கும் என நம்புகின்றோம்.

கடந்த பதினைந்தாண்டுகளுக்குள் தமிழ் மக்களின் அரசியலுரிமைகளையும், நீதி சார்ந்த கோரிக்கைகளையும் முன்வைத்துப் பல்வேறு கட்டங்களில் மக்கள் திரட்சிப் போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மக்கள் திரள்வதும், கலைவதும் ஏற்ற இறக்கமாகக் காலக்கணக்கில் வரையப்பட்டிருக்கிறது. அண்மைக்காலமாக அந்த வரைபின் கோலம் தொடர்ச்சியாக இறங்குமுகம் காட்டிவருவதையும் அவதானிக்கமுடிகிறது. இந்த இறங்குமுகம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அசைத்துப் பார்க்கவல்லது. எனவே தான் அணையா விளக்கு போராட்டம் மாதிரியான மக்கள்மயப்பட்ட போராட்டங்கள் இன்றைய சூழலுக்கு அவசியப்படுகின்றன. இந்த அவசியத்தை உணர்ந்து கடந்த 23,24,25 ஆம் திகதிகளில் செம்மணியில் திரண்ட அத்தனை பேருக்கும் உளமார்ந்த நன்றிகள். – என்று “மக்கள் செயல்“ அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.



# கொழும்பில் நீரில் மூழ்கிக் காணாமற்போன பல்கலைக்கழக மாணவனின் சடலம் மீட்பு

கொழும்புத் துறைமுக நகரத்தின் செயற்கை கடற்கரையைச் சேர்ந்த கடலில் மூழ்கி காணாமல் போயிருந்த பல்கலைக்கழக மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகர செயற்கை கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் காலை சக பல்கலைக்கழக மாணவர்களுடன் கடல் உயிரினங்களைப் பார்வையிடுவதற்காக சென்றிருந்த மாணவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடலினுள் நீந்திக் கொண்டிருந்த நிலையில் காணாமல் போன மாணவர் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டமையை அடுத்து மீட்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்றையதினம் பிற்பகல் மாணவனின் சடலம் கொழும்பு துறைமுக நகர கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. 24 வயதுடைய அஸ்கிரிய, கம்பஹா பகுதியைச் சேர்ந்த கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்று வந்த மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் குழுவொன்று பொழுதுப் போக்குக்காக ஸ்னோர்கெல் என்னும் நீரினுள் சுவாசிக்க உதவும் கருவியை அணிந்து கடலின் உற்பகுதியை பார்வையிட்ட போதே, இந்த மாணவர் காணாமல் போயுள்ளமை விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

மேலும் அம்மாணவர் அணிந்திருந்த ஸ்னோர்கெல் கருவி உயிர் பாதுகாப்பு அதிகாரிகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமனம்



சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம். எவ்.எம். ரொனி ப்ரைடூஸ் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக மீண்டும் நியமனம் பெற்றுள்ளார்.



# மருதமுனையில் தீ விபத்து வீடு முற்றாக எரிந்து நாசம்

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை பெரியநீலாவணை அக்பர் கிராமத்தில் வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக அந்த வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவம் ஏற்பட்டதும் உடனடியாக செயல்பட்ட அருகில் உள்ள பொது மக்கள் சுமார் ஒரு மணி நேரமாக முயற்சி செய்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

வீட்டில் இருந்த தளபாடங்கள், மின்சார பொருள்கள் உட்பட அனைத்து உடைமைகளும் தீயில் கருகி சாம்பலாகின. எனினும் வீட்டிலிருந்து எவருக்கும் உயிர் சேதங்கள் ஏற்படவில்லை.

வீட்டில் ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இந்த தீ விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# களவாடப்பட்ட நான்கு மோட்டர்களுடன் சாவகச்சேரியில் 2 இளைஞர்கள் கைது!



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் களவாடப்பட்ட 4 மோட்டர்களுடன் இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பாடசாலை, ஆலயம், வீடு என மூன்று இடங்களில் தண்ணீர் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளன என உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுக் காலை சரசாலை,மட்டுவில் பகுதியை சேர்ந்த 23 வயதான இரண்டு சந்தேக நபர்களை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டதில் சரசாலை காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4மோட்டர்களையும் தாங்கள் மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.



# திருமலை செயலகத்திற்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்

தமக்கு வழங்கப் பட்டுள்ள இடமாற்றத்தில் அநீதி இழைக்கப் பட்டுள்ளதாகக் கூறி திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்னால்அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களை கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.மஹ்தி நேரில் அங்கு சென்று சந்தித்து அவர்களின் கருத்துகளைக் கேட்டு அறிந்து கொண்டார்.



அதேநேரம் அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள இடமாற்றத்தில் அநீதி இழைக்கப் பட்டிருப்பின் அதை வெற்றி கொள்ள தன்னால் முடியுமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்களுடன் இருப்பார் எனக் கவனவீர்ப்பு நடாத்துகின்ற போராட்டக் காரர்களிடம் தவிசாளர் உறுதியளித்தார்.

நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இடம் பெற்றிருந்த நிலையில் இக்கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்





திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும், வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திகள் தொடர்பிலும் எதிர்கால திட்டங்கள் மற்றும் நிறைகுறைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகர, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப், ரொசான் அக்மீமன ,உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், மாகாண பிரதம செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சுற்றுலாவுக்கு மாணவர்களை ஏற்றி வந்த பஸ்ஸின் சாரதிக்கு திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் விபத்து

## கந்தளாயில் சம்பவம்; சிகிச்சை பலனின்றி ஓட்டுநர் மரணம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலைக்கு சுற்றுலாவுக்காக மாணவர்களை ஏற்றி வந்த பஸ்ஸின் சாரதிக்கு நேற்று பஸ்ஸைச் செலுத்திக் கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் பஸ் விபத்துக்குள்ளானது. சிகிச்சை பலனின்றி சாரதி மரணம் அடைந்தார்.

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவிலுள்ள கந்தளாய் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் வைத்து மின்கம்பத்துடன் மோதி இந்த பஸ் விபத்துக் குள்ளாகியுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகலிலிருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றி புல்மோட்டை பகுதிக்கு சுற்றுலா சென்ற பஸ் சாரதிக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நிலைதடுமாறிய பஸ் இரண்டு மோட்டார் சைக்கிளை சேதப்படுத்தி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் மின்கம்பம் மற்றும் மின்சார இணைப்பு வயர்களும் சேதமாகியுள்ளன.

பஸ்ஸில் பயணித்த எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. பஸ்ஸின் சாரதி கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சின்ன வெங்காயத்தின் இறக்குமதியைக் குறைக்குமாறு அச்சுவேலி – பத்தமேனி வெங்காய விவசாயிகள் மகஜர்






நாட்டில் சின்ன வெங்காயத்தின் இறக்குமதியைக் குறைக்குமாறு வலியுறுத்தி அச்சுவேலி பத்தமேனி வெங்காய உற்பத்தியாளர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

சின்ன வெங்காயச் செய்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அச்சுவேலி பத்தமேனி வெங்காய சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் தம்மால் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்திற்கு நிர்ணயமான போதிய விலை கிடைக்காமையால் தாம் பாதிப்படைந்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சின்ன வெங்காயத்தை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவது வரையிலான கால பகுதியில் அதிகளவான செலவினங்கள் தமக்கு ஏற்படுவதால் அதனை நிர்ணய விலைக்கு விற்க முடியவில்லை என்றும், அரசாங்கத்தினால் வெளிநாட்டில் இருந்து சின்ன வெங்காய இறக்குமதி செய்யப்படும் நிலை அதிகரித்துள்ளமையால் தமது உற்பத்திக்கான நிர்ணய விலை கிடைக்கவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதனால் அரசாங்கம் வெங்காய இறக்குமதியை மட்டுப்படுத்தி தமக்கான நிர்ணய விலையை கிடைக்கச் செய்ய உதவுமாறு யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஸ்ரீ மோகனிடம் மகஜர் ஒன்றை அவர்கள் கையளித்தனர்.




# மஸ்கெலியா பிரதேச சபைத் தலைவராக சுயேச்சைக் குழு உறுப்பினர் ராஜ்குமார்!

## பிரதித் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜ்குமார்





**(க.கிஷாந்தன்)**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர்களின் தலைவர், உபதலைவர் தெரிவு 27.06.2025 அன்று மதியம் 02.30 மணியளவில் மஸ்கெலியா அஷ்னிகா மண்டபத்தில் நடைபெற்றது.

சுயேச்சை குழு உறுப்பினர் கந்தையா ராஜ்குமார், திறந்த வாக்கெடுப்பு மூலம் பிரதேச சபையின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் பரமசிவம் ராஜ்குமார் சபையின் உப தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மஸ்கெலியா பிரதேச சபைக்கான தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய தெரிவுகள் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஏ.எம்.கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் சுயேச்சை குழு சார்பாக கந்தையா ராஜ்குமார், தேசிய மக்கள் சக்தி சார்பாக ஆசிர்வாதம் எலிஸ்டன் ஆகியோர் தலைவருக்காக போட்டியிட்டனர்.

தேசிய மக்கள் சக்தியில் அந்த சபைக்கு தெரிவான உறுப்பினர்கள் தமது தரப்பில் பெயரிடப்பட்ட தலைவர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளருக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதால் இரகசிய வாக்கெடுப்பு நடத்துமாறு ஆணையாளரிடம் கோரினர். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தலைவர் தெரிவிக்கான வாக்கெடுப்பை திறந்த முறையில் நடத்துமாறு கோரினர்.

வாக்கெடுப்பை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில்ல், திறந்த வாக்கெடுப்பு நடத்துமாறு 10 வாக்குகளும், இரகசிய வாக்கெடுப்பு நடத்துமாறு 07 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்படி மஸ்கெலியா பிரதேச சபை தலைவர் தெரிவிற்கான வாக்கெடுப்பு திறந்த முறையில் நடத்தப்பட்டது.

இதில் 09 வாக்குகளை பெற்று சபையின் தலைவராக சுயேச்சை குழு உறுப்பினர் கந்தையா ராஜ்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

எதிராக போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தி சார்பாக ஆசிர்வாதம் எலிஸ்டன் 08 வாக்குகளே பெற்றுக்கொண்டார்.

உப தலைவர் தெரிவில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக பரமசிவம் ராஜ்குமார் பெயர் முன்மொழியப்பட்டது.

அதனையடுத்து, இரண்டாவது நபரின் பெயர் முன்மொழியப்படாததனால் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பரமசிவம் ராஜ்குமார் சபையின் உப தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

17 உறுப்பினர்களைக் கொண்ட மஸ்கெலியா பிரதேச சபையில் உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

- தேசிய மக்கள் சக்தி - 07
- ஐக்கிய மக்கள் சக்தி- 06
- சுயேச்சை குழு (01) - 02
- ஐக்கிய தேசியக் கட்சி - 02

# கற்பிட்டி முகத்துவாரம் கடற்கரையில் 4 பொதிகளில் 3 இலட்சத்திற்கும் அதிகமான போதை மாத்திரைகள்



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி முகத்துவாரம் கடற்கரைப் பகுதியில் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 4 பொதிகளில் சுமார் மூன்று லட்சத்து 17 ஆயிரம் போதை மாத்திரைகளை கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரன்வலராச்சி தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மேற்கொண்ட தேடுதலின் போது கைப்பற்றினர்.

மேற்படி போதை மாத்திரை பொதிகளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வந்தவர்கள் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை காரணமாக அவற்றைக் கைவிட்டுச் சென்றிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும், இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கற்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரன்வலராச்சி தெரிவித்தார்

# புத்தளம் மாநகர சபையின் உறுப்பினரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டது

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தியினை பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர் ஒருவரின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்த ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளது.

புத்தளம் மாநகர சபையின் மேயர் மற்றும் பிரதி மேயரை தெரிவின் போது கட்சி முடிவிற்கு மாற்றமாக செயற்பட்டமையின் காரணமாக இவ்வாறு கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மதும பண்டாரவின் கையொப்பத்துடன் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாநகர சபை உறுப்பினர் என்.எம்.என். நுஸ்கியின் கட்சி உறுப்புரிமை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.


සමගි ජන බලවේගය

SAMAGI JANA BALAWEGAYA

2025.06.19



# மருதமுனையில் இன்று மின் ஒளியில் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் மிமா - பிறிஸ்பேன் அணிகள்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையோடு எலைட் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்து நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி 2025, சீஸன் - 3 இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கழகத்தின் தலைவரும், மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் செயலாளருமான எம்.ஐ.நஜிமுல் றியாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

அணிக்கு 11 பேர் கொண்ட 7 ஓவர் மென் பந்து கிரிக்கெட் பகல் – இரவு சுற்றுப் போட்டியாக இதன் ஆட்டங்கள் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. மருதமுனை கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 20 கிரிக்கெட் அணிகள் இந்த சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டன. மொத்தம் 39 ஆட்டங்கள் நடைபெற்றன.

முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் மருதமுனை எலைற் மற்றும் பிறிஸ்பேன் அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இதில் பிறிஸ்பேன் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தெரிவானது. இரண்டாவது அரை இறுதியாட்டம் கல்பனா அணிக்கும் மிமா அணிக்குமிடையில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் மிமா அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தெரிவானது.

மிமா அணிக்கும் பிரிஸ்பேன் அணிக்கும் இடையிலான இறுதியாட்டம் மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன இன்று சனிக்கிழமை இரவு மாலை 7.00 மணி முதல் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

சம்பியனாக தெரிவு செய்யப்படும் அணிக்கு பெறுமதி வாய்ந்த சம்பியன் வெற்றிக் கிண்ணம் மற்றும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்படவுள்ளது. இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணம் மற்றும் பத்தாயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்படவுள்ளது. இதே வேளை சுற்றுப் போட்டியின் சிறந்த வீரர், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர், 39 ஆட்டங்களுக்குமான சிறந்த வீரர்கள், சுற்றுப்போட்டில் கலந்து கொண்ட மிகவும் ஒழுக்கமுள்ள அணி, சிறந்த களத்தடுப்பாளர் என பல்வேறு பரிசுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இறுதி நாள் நிகழ்வுக்கு மருதமுனை இல்ஹாஸ் பூட் சிற்றி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் சமூக சேவையாளருமான பி.எம்.எம். இல்ஹாஸ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார். கௌரவ அதிதிகளாக அனா கேன்லூம் நிறுவனத்தின் பனிப்பாளர் ஏ.எச்.எம். தௌபீக், றிஸ்வி மென்ஸ் வெயார் உரிமையாளர் எம்.எப்.றிஸ்வி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட அதிதிகளாக மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஏ.மனாஸ் உட்பட அனுசரணையாளர்கள் பலரும் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கழகத்தின் சுற்று போட்டி குழு தலைவர் நசீம் கான், முகாமையாளர் ஐ.எல்.எம்.முபீன், செயலாளர் ஐ.எம்.குமாயூன், தொழில்நுட்ப பிரிவு பொறுப்பாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ், மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் நிருவாகத்தினர், போட்டிகளில் கலந்து கொள்ளும் கழகங்களின் அணித் தலைவர்கள் , ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.






# இன்றைய ராசி பலன்கள் - 28.06.2025




இன்று சில சௌகரியங்களை தியாகம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். திறமையான திட்டமிடல் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி அடையலாம். ஆன்மீகம் சம்பந்தமான பயணங்கள் இன்று உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

பணியில் அமைதியின்மையும் பதட்டமும் காணப்படும். அதிக வேலைச் சுமை கவலையை அளிக்கும்.

உங்கள் முனைப்பான உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் நீங்கள் வெளிப்படுத்தலாம். இது நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

பணவரவு உறுதியற்ற நிலையில் காணப்படுகிறது. பெருகிவரும் செலவினங்களால் கவலை ஏற்படும்.

தொண்டை வலிக்கான வாய்ப்புகள் காணப்படும்.




இன்றைய நாள் திருப்திகரமாக இருக்காது. அவநம்பிக்கை உணர்வுகள் உங்களை வளரவிடாமல் தடுக்கும். பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். கவனக்குறைவான பேச்சுக்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. தியானம் மேற்கொள்வது பயனளிக்கும்.

பணிச்சூழல் ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்காது. குறித்த நேரத்தில் பணிகளை முடித்தாலும் பணியில் தவறுகள் காணப்படும்.

உங்கள் மனதில் ஏற்படும் மாறுபாடுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

பெருகி வரும் செலவினங்களால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.




இன்றைய நாள் மகிழ்ச்சிக்கான மற்றும் மறக்க முடியாத நினைவுகளை அளிக்கும் நாளாக அமையும். புதிய தொடர்புகள் உருவாக்குவதும் சமூகக் கூட்டங்களில் கலந்து கொள்வதும் உங்களை மகிழச் செய்யும்.

பணிச்சூழல் காரணமாக உங்கள் செயல்பாட்டில் தாமதம் காணப்படும். பணியில் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இன்று எளிதில் கோபத்துக்கு ஆளாவீர்கள். உங்களின் இந்த உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உங்கள் துணையுடனான நல்லுறவு பாதிக்கப்படும். மகிழ்ச்சியுடன் இருக்க இத்தகைய உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகரிக்கும்.




இன்று உங்கள் செயல்களில் விரைந்து முடிவெடுக்க சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். பயணங்களால் நல்ல பலன் கிடைக்கும்.

பணியிடத்தில் திறமையுடன் பணியாற்றுவீர்கள். உங்கள் செயல்பாட்டுக்கு மேலதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் வெளிப்படையான மகிழ்ச்சியான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் ஒருங்கிணைந்து மகிழ்வாக இருக்க இது உதவும்.

நிதிவளர்ச்சி மகிழ்ச்சியை அளிக்கும். ஆக்கமான விஷயங்களுக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

நல்ல ஆரோக்கியம் காணப்படும். மனதைரியத்துடன் இருந்தால் நல்ல தேக ஆரோக்கியம் சாத்தியமாகும்.




இன்றைய நாள் துடிப்பான நாளாக இருக்கும். இன்று சந்தோஷமான மனநிலையில் இருப்பீர்கள். உங்களிடம் தலைமை பொறுப்பிற்கான தகுதி காணப்படும். அதனால் உங்கள் தகுதி உயரும்.

பணிச்சூழல் மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கத்தக்கதாக காணப்படும். குறித்த நேரத்திற்குள் விரைந்து பணியை முடிப்பது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவும்.

உங்களின் மகிழ்வான பேச்சு உங்கள் துணையாரை மகிழ்விக்கும். மற்றும் திருப்தியை அளிக்கும் உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணையுடனான பிணைப்பை வலுவாக்கும்.

இன்று பணம் உபரியாக காணப்படும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களால் சேமிக்கவும் முடியும்.




உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். உங்கள் செயல்களில் வெற்றி பெற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல.

அதிகமான பணிச்சுமை உங்கள் கவலையை அதிகரிக்கும். பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளன.

உங்கள் துணையுடன் நட்புணர்வை பகிர்ந்து கொள்ள வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள இது மிகவும் முக்கியம்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அதிகரிக்கும் பொறுப்புகளால் ஏற்படும் செலவினங்களை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

மனஅழுத்தத்தின் காரணமாக முதுகுவலி ஏற்படலாம்.




இன்று சற்று மந்தமாக காணப்படும். இன்று உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு பதில் கிடைப்பது அரிது. இதனால் குழப்பமான மனநிலை காணப்படும்.

பொறுமையான அணுகுமுறையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். சக ஊழியர்களுடன் சில தொந்தரவுகளை சந்திக்க நேரலாம்.

தொடர்பாடலில் காணப்படும் இடைவெளி காரணமாக துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும் உங்கள் துணையாரின் கருத்துக்கு முரணான கருத்தை வேறு விதமாக பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யவும் கூடுதல் செலவினங்களை கையாளவும் கடன் வாங்க நேரிடலாம்.

மனஅழுத்தம் காரணமாக கால்களில் வலி ஏற்படும்.




இன்று உங்களுக்கு பல வாய்ப்புகள் கிடைக்கும். அதனை பயன்படுத்தி இன்றைய நாளை அனுகூலமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் மனதில் பல எண்ணங்கள் உருவாகும். அதன் மூலம் உங்கள் தனித்தன்மையை வெளிப்படுத்துவீர்கள். அதற்குரிய பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக சூடான வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

இன்று சேமிப்பு அதிகரிக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு இன்று கூடுதல் பணவரவும் சலுகைகளும் கிடைக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளும் இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.06.2025




இன்று வேலைகளை எளிதாகச் செய்ய முடியாத அளவுக்கு கடினமான சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு வேலை செய்வதன் மூலம் வெற்றி காணலாம். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் முற்போக்கான பலன்கள் கிடைக்காது. உங்கள் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் வேறு வேலை மாற்றம் உங்களுக்கு தேவைப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது நல்லுறவை மிகவும் பாதிக்கும் எனவே உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது மிகவும் நல்லது.

நிதிவளர்ச்சி ஏமாற்றத்தை அளிக்கும். கூடுதலான தேவையற்ற செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று செய்யும் அனைத்து செயல்களிலும் நடைமுறை அணுகுமுறையை கையாள வேண்டும். உங்களை உற்சாகப்படுத்திக்கொள்வதன் மூலம் சோர்வை வென்று நம்பிக்கையுடன் இருக்கலாம்.

அதிக பணிச்சுமை கவலையை அளிக்கும். இது பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தும். இந்த உணர்வு காரணமாக உங்களால் திறமையாக பணியாற்ற இயலாது.

நீங்கள் விஷயங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நல்லுறவிற்கு எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் அணுகுமுறை தேவை. குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

நிதிவளர்ச்சி திருப்தி அளிக்கும் வகையில் இருக்காது.




இன்று உங்கள் பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். இன்றைய விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையாது என்ற காரணத்தினால் உங்கள் எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது சிறந்தது.

பணியில் முன்னேற்றம் காண நம்பிக்கையுடனும் சாந்தமாகவும் பணியாற்ற வேண்டும். உங்கள் செயல்திறன் மீது உங்களுக்கு அதிருப்தி நிலவும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கோ அல்லது புனித ஸ்தலங்களுக்கோ சென்று மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான ஒரு நல்ல நிலை காணப்படும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இருக்கும் பணத்தை கவனமாக பாதுகாக்க வேண்டும். சேமிக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும். வாழ்க்கையில் சாதாரணமான அணுகுமுறை வேண்டும். ஆன்மீக காரியங்களில் நேரத்தை செலவழிப்பதன் மூலம் உங்களுக்கு வளர்ச்சி கிடைக்கும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். புதிய வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகள் சாத்தியம். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நன்றாகப் பேசி நட்புணர்வுடன் இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இது அவசியம்.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சியை அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். பணத்தை சரியான முறையில் பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.






# புன்னைச்சோலை பத்திரகாளி ஆலய தீ மிதிப்பு

**(பழுவூரான்)**

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க அம்மன் ஆலயங்களுள் ஒன்றான புன்னைச்சோலை ஸ்ரீபத்திர காளியம்மன் ஆலய தீமிதிப்பு நேற்று வெள்ளிக்கிழமை மாலை பல்லாயிரக்கணக்கான மக்களின் அரோகரா கோசங்களுக்கு மத்தியில் பக்திபூர்வமாக நடந்தேறியது.

இதன்போது தேவாதிகள் மற்றும் அடியவர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு தீமிதிப்பில் ஈடுபட்டிருந்தமையைக் காண முடிந்தது.